# <u>RECORD OF DEPOSITION OF WITNESS</u>

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | **:** | O.S.No. 68/2016 | **CNR No.** | **:** | TNKI13-000713-2016 |
| **Name** | **:** | மாது | **Father's Name** | **:** | கொளந்தை |
| **Witness for** | **:** | Defendant | **Calling** | **:** | DW1 |
| **Age** | **:** | 49 | **Village** | **:** | ஒட்டப்பட்டி |
| **Taluk** | **:** | ஊத்தங்கரை | **District** | **:** | கிருஷ்ணகிரி |
| **Start Time** | **:** | 12:06 PM | **End Time** | **:** | 12:25 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 12.3.2025 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

(1) வாதிகளை தெரியுமா என்றால் தெரியும். வாதிகள் எனது உறவினர்களா என்றால் ஆமாம், பெரியப்பா சின்னதம்பியின் மகன் மற்றும் மருகள் ஆவார்கள். 1ம் பிரதிவாதி யார் என்றால் எனது தந்தை ஆவார். 2ம் பிரதிவாதி சம்பூர்ணம் யார் என்றால் எனது தாயார் ஆவார். 3ம் பிரதிவாதி சுப்பிரமணி எனது அண்ணன் ஆவார். 4ம் பிரதிவாதி அண்ணாமலை எனது தம்பி ஆவார். 5ம் பிரதிவாதி அண்ணகிளி எனது அக்கா ஆவார். எனது தாத்தா பெயர் என்னவென்றால் ஜெல்லை கவுண்டர் ஆகும். ஜெல்லை கவுண்டர் உடன் பிறந்தவர்கள் யார் என்றால் 8 நபர்கள் ஆவார்கள், பெரியண்ணன், பெரியக்கா, சின்னதம்பி, நடேசன், கருங்கண்ணன், மற்றும் இரண்டு நபர்கள் ஆவார்கள். அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா என்றால் கருங்கண்ணனை தவிர மற்றவர்கள் இறந்துவிட்டார்கள். ஜெல்லை கவுண்டருக்கு வழக்கு சொத்துக்கள்

எவ்வாறு பாத்தியம் என்றால் அவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துகளாகும். ஜெல்லை கவுண்டர் அவர்களது உடன் பிறந்தவர்கள் எவ்வாறு பாகம் பிரித்தார்கள் என்று தெரியுமா என்றால் வாய்மொழி பாகம் ஆனால் தேதி தெரியாது. ஜெல்லை கவுண்டருக்கு வாய் மொழியாக பாகம் ஏற்பட்டது என்று எவ்வாறு தெரியும் என்றால் எனது தந்தை சொல்லி தான் தெரியும். ஜெல்லை கவுண்டர் குடும்பத்தில் வாய்மொழி பாகம் ஏற்பட்டு எவ்வளவு ஆண்டுகள் ஆகியுள்ளது என்றால் எனக்கு நேரடியாக தெரியாது எனது அப்பா சொல்லி தான் தெரியும்.

(2) எனது அப்பாவிற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் மொத்தம் 4 நபர்கள் ஆவர்கள், அவர்கள் சுப்பிரமணி, அண்ணகிளி, மாது, அண்ணாமலை ஆவார்கள். எங்களுக்குள் பாகம் ஏற்பட்டதா என்றால் இல்லை. எனது தாத்தா ஜெல்லை கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்ளை யார் யாருக்கு பிரித்து கொடுத்தார் என்றால் எனது அப்பாவுக்கும் 8 நபர்களுக்கும் பிரித்து கொடுத்துள்ளார். எனது தாத்தாவிற்கு எவ்வளவு சொத்துக்கள் இருந்தது என்றால் தோராயமாக 50 ஏக்கர் இருந்தது. 50 ஏக்கர் நிலத்தின் சர்வே எண்கள் மற்றும் விஸ்த்தீரணங்கள் தெரியுமா என்றால் தெரியாது. மேற்சொன்ன 50 ஏக்கரை யார் யாருக்கு பிரித்து கொடுத்தார் என்றால் எனது அப்பா உட்பட எனது பெரியப்பா, அத்தை ஆகியோர்களுக்கும் பிரித்து கொடுத்தார். யார் யாருக்கு எவ்வளவு சொத்து பிரித்து கொடுத்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது.

(3) ஜெல்லை கவுண்டர் எப்போது இறந்தார் என்றால் தெரியாது. நான் அவரை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. ஜெல்லை கவுண்டர் பதிவு

செய்யப்பட்ட பாக பத்திரம் எதாவது எழுதினாரா என்றால் இல்லை, வாய் மொழியாக தான் பிரித்து கொடுத்தார். யார் யாருக்கு எந்த சர்வே எண்ணில் பிரித்து கொடுத்தார் என்றால் எனது அப்பாவிற்கு பிரித்து கொடுத்த சர்வே எண் மட்டும் தான் தெரியும், மற்ற எண்கள் தெரியாது.

(4) வாதிகள் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியுமா என்றால் அவர்களுடைய நிலம் எங்கள் வசம் உள்ளதாக கேட்டு தாக்கல் செய்துள்ளார். எனது தாத்தா ஜெல்லை கவுண்டர் வாய்மொழியாக எந்த தேதியில் கொடுத்தார் என்றால் தேதி தெரியாது, ஆனால் 63 ஆண்டுகளுக்கு முன்பு எனது அப்பாவிற்கு கொடுக்கப்பட்டதாக எனது அப்பா சொல்லியுள்ளார். கொடுக்கப்பட்டது பதிவு செய்யப்பட்டாதா என்றால் பதிவு செய்யப்பட்டதாக எனது அப்பா சொல்லியுள்ளார், பட்டாவும் ஏற்பட்டது. எனது அப்பா பெயரில் எப்போது பட்டா ஏற்பட்டது என்றால் தேதி தெரியாது, பட்டா எண் தெரியும். எனது தாத்தா ஜெல்லை கவுண்டர் வசம் வைத்துள்ள சொத்துககளை தான் பாகம் பிரித்து கொடுத்தாரா என்றால் ஆமாம். வருவாய் துறை ஆவணங்கள் ஆதியில் ஜெல்லை கவுண்டர் பெயரில் தான் இருந்தது என்று சொன்னால் இருந்திருக்கலாம்.

(5) <u>**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**</u>

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

sd/-xxx

District Munsif
Uthangarai